**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.170/2025**

**வழக்கு சாட்சி P.W.3**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமிநாதன் | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : மாணிக்கம் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : மார்க்கம்பட்டி | வயது | : சுமார் 48 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 11.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதா என்றால் ? இல்லை. யார் என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று அழைத்து வந்தார்கள் என்றால் ? வக்கீல் சார் கூப்பிட்டார் அதனால் வந்தேன். வக்கீல் பெயர் என்ன என்றால் ? திரு.சந்திரசேகரன். மேற்படி வழக்குரைஞரிடம் எனக்கு சம்மந்தப்பட்ட வழக்குகள் உள்ளதா என்றால் ? இல்லை. முதன்மை சாட்சியம் தயார் செய்வதற்கு விபரங்கள் யார் சொன்னது என்றால் ? வழக்குரைஞர் அலுவலகத்தில் வைத்து டைப் செய்யப்பட்டது. அதற்கான விபரங்கள் யார் டைப் செய்தார்கள் என்றால் ? வழக்குரைஞர் தான் டைப் செய்தார். வழக்குரைஞர் டைப் செய்து கொடுத்ததில் நான் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் செய்தேன் என்றால் ? படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் சரியாக உள்ளதா என்றால் ? ஆமாம், சரியாக தான் உள்ளது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ? 8ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் ? தமிழ் நன்றாக தெரியும். ஆங்கிலம் ஓரளவிற்கு தெரியும். ஆவணம் எழுதுவதற்கு எனக்கு உரிமம் உள்ளதா

என்றால் ? இல்லை. இதுவரை எத்தனை புரோநோட்டுகள் எழுதியிருப்பேன் என்றால் ? இந்த புரோநோட்டு தான் முதன்முதலாக எழுதியுள்ளேன். புரோநோட்டில் என்னென்ன விபரங்கள், எப்படி எழுதவேண்டும் என்று தெரியுமா என்றால் ? தெரியாது. பணம் வாங்கியுள்ளதாக சொன்னார்கள். அதனால் எழுதினேன். யார் சொல்லச் சொல்ல எழுதினேன் என்றால் ? வீட்டில் அரவிந்த்குமார் குடியிருந்தார். இந்தமாதிரி புரோநோட்டு எழுதவேண்டும் என்று சொன்னார். அதன்பிரகாரம் எழுதினேன். அரவிந்த்குமார் எனக்கு மிகவும் வேண்டியவர் என்றால் ? எனது வீட்டில் 6 மாதம் குடியிருந்த வகையில் எனக்கு பழக்கம். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ? நான் காய்கறி கடை வைத்துள்ளேன் மற்றும் மார்க்கெட்டில் கூலி வேலைக்கு செல்வேன். பாத்திரக்கடைக்கு வேலைக்கு செல்வேன். ஒரு நாளைக்கு எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை வேலைக்கு செல்வேன் என்றால் ? காலை 05.00 முதல் காலை 08.00 மணி வரை பாத்திரக்கடைக்கு வேலைக்கு செல்வேன். அதற்கு பிறகு நான் எனது சொந்த வேலைக்கு சென்றுவிடுவேன். எத்தனை மணி வரை வேலை செய்வேன் என்றால் ? மாலை 05.00 மணி வரை செய்வேன். வாரத்தில் எல்லா நாட்களிலும் எனது வேலையின் நடைமுறை இதுதான் என்றால் ? ஆமாம். தாவா கடனுறுதிசீட்டு முழுவதும் அச்சடிக்கப்பட்டது என்றால்? அச்சடிக்கப்பட்ட நோட்டில் நான் எழுதியுள்ளேன். அதில் தொகை எண்ணால் எத்தனை இடத்தில் எழுதியுள்ளேன் என்று தெரியுமா என்றால் ? ஒரு இடத்தில் மட்டும் எண்ணால் எழுதியுள்ளேன். மற்றொரு இடத்தில் எண்ணாலும், எழுத்தாலும் எழுதியுள்ளேன். தொகையினை எண்ணால் எத்தனை முறை எழுதியுள்ளேன் என்றால் ? ஒரு முறை எழுதியுள்ளேன். தொகையினை எழுத்தால் எத்தனை முறை எழுதியுள்ளேன் என்றால் ? ஒருமுறை தான் எழுதியுள்ளேன். எத்தனை முறை அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் ? அடித்தல் திருத்தல் இல்லை. எழுதி ஒருவருடம் ஆகிவிட்டதால் சரியான முறையில் தெரியவில்லை. கடனுறுதிசீட்டில் வட்டி சதவீதம் எவ்வளவு

எழுதியுள்ளேன் என்றால் ? ஒரு சதவீதம் என்று சொன்னார்கள். அதை தான் எழுதினேன். நானும், வாதியும், சாட்சியும் சேர்ந்து பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக போட்டு பணம் பறிக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? இல்லை. கடனுறுதிசீட்டு எழுதினால் அதில் உள்ள நபர்களின் விபரங்கள் எழுதவேண்டும் என்றால் ? அட்ரஸ் எழுதியுள்ளேன். சாட்சிகளின் விபரங்களை எழுதியுள்ளேனா என்றால் ? எழுதியுள்ளேன். சேகர் என்பவரின் தகப்பனார் பெயர் என்ன எழுதியுள்ளேன் என்றால் ? பழனிச்சாமி என்று எழுதியுள்ளேன். அவருடைய முகவரி என்ன எழுதியுள்ளேன் என்றால் ? முகவரி எனக்கு தெரியவில்லை. சாட்சி மீண்டும் ஒருவருடத்திற்கு முன்பு எழுதியதால் ஞாபகம் இல்லை என்று பதில் அளித்தார். வழக்கிற்காக வேண்டி, வாதிக்கு ஆதரவாக சொல்ல வேண்டும் என்பதால் ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. என்னை பற்றி முழுவிபரமும் கடனுறுதிசீட்டில் எழுதியுள்ளேன் என்றால் ? எனது பெயர், தகப்பனார் பெயர், அட்ரஸ் எழுதியுள்ளேன். எனது பெயர், தகப்பனார் பெயர், மாணிக்கம் என்று எழுதியுள்ளேன். முகவரி என்ன எழுதியுள்ளேன் என்றால் ? 2/9, எக்டன்சன் 1, மார்க்கம்பட்டி, ஒட்டன்சத்திரம் தாலுக்கா, திண்டுக்கல் டிஸ்ட்ரிக் என்று எழுதியுள்ளேன். வாதி, பிரதிவாதியின் விபரங்கள் எதை பார்த்து எழுதினேன் என்றால் ? அவர் சொல்லி தான் எழுதினேன். தாவா கடனுறுதிசீட்டு எழுதிய தேதியில் பிரதிவாதி அந்த இடத்திற்கு வரவில்லை என்றாலும், வாதியிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும், பிரதிவாதியை பற்றி விபரங்கள் எதுவும் தரவில்லை என்றாலும், கடனுறுதிசிட்டு எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், நான் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றாலும், போலியாக பிரதிவாதியின் கையொப்பத்தை கடனுறுதிசீட்டில் போட்டு கடனுறுதிசீட்டு தயார் செய்தோம் என்றால் ? சரியல்ல. பிரதிவாதி தான் கையொப்பம் செய்தார். பிரதிவாதி எக்காலத்திலும் தாவா கடனுறுதிசீட்டில்

கையொப்பம் போடவில்லை என்றாலும், கடன் எதுவும் பெறவில்லை என்றாலும்? சரியல்ல. குரோதி வருடம், மாசி மாதம் 21ம் தேதி கடனுறுதிசீட்டு எழுதிய கிழமை என்ன கிழமை என்றால் ? கிழமை எனக்கு தெரியவில்லை. 02.03.2025 என்று தேதி மட்டும் தெரியும். தமிழ் தேதி கடனுறுதிசீட்டில் நான் எழுதவில்லை என்றால் ? ஆமாம். வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் நான் பொய்யாக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

(ஒ/ம்.திரு.சி.ஜெயப்பிரகாஷ்)
சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.170/2025**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேகர் | தொழில் | : கோவில் பூசாரி |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : மார்க்கம்பட்டி | வயது | : சுமார் 44 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 11.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதா என்றால் ? இல்லை. யார் அழைத்தன் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ? அரவிந்த்குமார் சொல்லி வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கை தயார் செய்ய தகவல் யார் சொன்னார்கள் என்றாலும், எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் ? வழக்குரைஞர் அலுவலகத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொன்னது என்றால் ? வழக்குரைஞரும், அரவிந்த்குமாரும் சொன்னார்கள். அதற்கு பிறகு தான் எனக்கு தெரியும். நான் சொல்லி தட்டச்சு செய்யவில்லையா என்றால் ? புரோட்டு வழக்கில் பணம் கொடுக்காததால் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் நான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொன்னால் நான் சொன்னேன். எனக்கு வாதியை எத்தனை ஆண்டுகாலமாக தெரியும் என்றால் ? சுமார் 3, 4 வருடங்களாக கோவிலுக்கு வரப்போக தெரியும். எனக்கும், அரவிந்த்குமாருக்கும் நெருக்கமான பழக்கம் உள்ளதா என்றால் ? அரவிந்த்குமாரை பக்தராக தெரியும். மற்றபடி பழக்கமில்லை. இவ்வழக்கு

பிரதிவாதியை எனக்கு எத்தனை ஆண்டுகாலமாக தெரியுமா என்றால் ? பிரதிவாதியை எனக்கு ஏற்கனவே தெரியாது. பணம் வாங்கிய அன்று தான் எனக்கு தெரியும். நான் தான் சேகர் என்பதற்கும், முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ள விலாசத்தில் குடியிருப்பதற்கு ஆதரவாக எந்தவொரு சான்றினையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? ஆதார் அட்டையை வைத்துள்ளேன். பிரதிவாதிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும், 02.03.2025 அன்றோ அதற்கு முன், பின் தேதிகளிலோ பிரதிவாதி என்னை பார்த்தது இல்லை என்றால் ? சரியல்ல. பணம் கொடுத்த அன்று தான் பிரதிவாதியை தெரியும். 02.03.2025ம் தேதி பிரதிவாதி எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், யாரையும் சந்திக்கவில்லை என்றாலும் ? சரியல்ல. அன்று பிரதிவாதி வந்திருந்தார். பிரதிவாதி வந்ததாகவும், பணம் வாங்கியதாகவும், வாதிக்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. வாதி, நான், சாமிநாதன் ஆகிய மூவரும் சேர்ந்து கூட்டு சதி செய்து போலியாக பிரதிவாதியின் கையெத்தை தாவா கடனுறுதிசீட்டில் போட்டு பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? சரியல்ல. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் ? எனக்கு தமிழ் சரியாக தெரியாது. கையெழுத்து போடமட்டுமே தெரியும். ஆங்கிலம் எனக்கு தெரியாது. தாவா கடனுறுதிசீட்டு வாதியிடம் பிரதிவாதி பணம் வாங்கி கொண்டு கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றாலும், பிரதிவாதியின் கையொப்பத்தை போலியாக போட்டு தாவா கடனுறுதிசீட்டை தயார் செய்துள்ளோம் என்றாலும் ? சரியல்ல. கடனுறுதிசீட்டில் என்னென்ன வாசகங்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் ? கடன் கொடுத்தார்கள் அப்போது பணம் வாங்கினார்கள் அது மட்டும் தான் எனக்கு தெரியும். கையெழுத்து போடச் சொன்னார்கள். சாட்சியாக

கையொப்பம் போட்டேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் ? பணம் ரூ.6 இலட்சம் தொகை கொடுத்தார்கள். அது மட்டும் தெரியும். அந்த தேதியில் பணப்பரிமாற்றம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், பிரதிவாதி அங்கு வரவில்லை என்றாலும் ? சரியல்ல. கடனுறுதிசீட்டில் தொகை எண்ணால் எத்தனை இடத்தில் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் ? மறந்துவிட்டது, நினைவில் இல்லை. எழுத்தால் எத்தனை இடத்தில் எழுதப்பட்டது என்றால் ? எனக்கு தெரியவில்லை. கடனுறுதிசீட்டில் எத்தனை அடித்தல், திருத்தல் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. தொகை எந்த விபரங்களில் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ? ரூ.500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார்கள். எங்கிருந்து எடுத்து கொடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் ? பணத்தை அங்கு வைத்திருந்தார்கள். அப்போது தான் நான் சென்றேன். நான் யாருடன் சென்றேன் என்றால் ? நான் மட்டும் தான் சென்றேன். கடனுறுதிசீட்டில் வாசகங்கள் அச்சடிக்கப்பட்டது என்றால் ? கையில் எழுதினார்கள். கடனுறுதிசீட்டு முழுவதும் கையால் தான் எழுதப்பட்டுள்ளதா என்றால் ? சாமிநாதன் என்ற பையன் கையில் தான் எழுதினார். பிரதிவாதியுடன் யார் யார் வந்திருந்தார்கள் என்றால் ? அவர் மட்டும் தான் வந்திருந்தார். பிரதிவாதி எதில் வந்திருந்தார் என்றால் ? சரியாக கவனிக்கவில்லை. கடனுறுதிசீட்டினை படித்து காட்டினார்களா என்றால் ? ஆமாம். கடனுறுதிசீட்டில் வட்டி விகிதம் எவ்வளவு போட்டுள்ளது என்றால் ? எனது முன்பு வட்டி பற்றி பேசவில்லை. கடனுறுதிசீட்டை படிக்கும் போது வட்டியை பற்றி சொல்லவில்லையா என்றால்? புரோநோட்டை முழுவதும் படிக்கவில்லை. பணம் வாங்கிக் கொண்டு எழுதியதாக படித்தார்கள். நான் சொல்வது போல் பிரதிவாதி கடந்த 02.03.2025ம் தேதி அங்கு வரவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. நான் வாதிக்கு வேண்டிய நபர் என்பதாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டை

கடைசியாக நான் எப்போது பார்த்தேன் என்றால் ? 02.03.2025ம் தேதி எழுதியபோது பார்த்தேன். நானும், வாதியும், சாட்சியும் சேர்ந்து பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக போட்டு தயாரிக்கப்பட்ட கடனுறுதிசீட்டு என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் அன்றைய தேதியில் பிரதிவாதி கையொப்பம் போடவில்லை என்றாலும், அதில் பிரதிவாதி கையொப்பம் அல்ல என்றாலும் ? சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால் நான் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் ? சரியல்ல.

(ஒ/ம்.திரு.சி.ஜெயப்பிரகாஷ்)
சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.170/2025**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : C.அரவிந்த்குமார் | தொழில் | : விவசாயம் மற்றும் டிரான்ஸ் போர்ட் தொழில் |
| தகப்பனார் பெயர் | : சின்னச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : மார்க்கம்பட்டி | வயது | : சுமார் 34 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 11.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நானும், பிரதிவாதியும் நண்பர்கள் என்று சொல்வது பொய் என்று சொன்னால் ? சரியல்ல, நண்பர்கள் தான். பிரதிவாதிக்கும், எனக்கும் எத்தனை ஆண்டுகாலமாக பழக்கம் என்றால் ? 12 அல்லது 13 ஆண்டுகால பழக்கம். பிரதிவாதிக்கு தற்போது என்ன வயது இருக்கும் என்றால் ? சுமார் 45 வயது முதல் 47 வயதிற்குள் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதிக்கு வயது என்ன சொல்லியுள்ளேன் என்றால் ? வயது சுமார் 50 என்று சொல்லியுள்ளேன். பிரதிவாதி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ? ஏற்கனவே கார் கண்சல்டிங் தொழில் செய்து வந்தார். தற்போது என்ன தொழில் செய்து வருகிறார் என்று தெரியவில்லை. பிரதிவாதியின் குடும்பத்தில் யார் யார்கள் உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ? பிரதிவாதியை மட்டும் தான் தெரியும், மேலும் அவரது தகப்பனாரை பற்றி தெரியும். மற்றவர்களை பற்றி தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் ? எனக்கு சரியாக தெரியவில்லை, நினைவில் இல்லை. பிரதிவாதியின் தாயார் பெயர் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தாயார் எப்போது இறந்தார் என்று தெரியுமா

என்றால் ? எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள், எங்கு படிக்கிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் ? தெரியாது. உண்மையிலுமே பிரதிவாதியை எனக்கு யார் என்றே தெரியாது என்றாலும், பிரதிவாதி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? பிரதிவாதியை தெரியும். பிரதிவாதி எக்காலத்திலும் எனக்கு நண்பராக இருந்ததில்லை என்றாலும், நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. பிரதிவாதிக்கு என்னை இவ்வழக்கிற்கு பின்னிட்டு தான் தெரியும் என்றால் ? சரியல்ல. ஏற்கனவே தெரியும். பிரதிவாதியின் தகப்பனார் மற்றும் தாயார் இறப்பிற்கு சென்று பிரதிவாதியிடம் துக்கம் விசாரித்துள்ளேனா என்றால் ? இல்லை. பிரதிவாதிக்கும், எனக்கும் எக்காலத்திலும் கொடுக்கல், வாங்கல் இல்லை என்றால் ? சரியல்ல. பிரதிவாதிக்கும், எனக்கும் எக்காலத்திலும் எந்தவிதமான பணபரிவர்த்தனை இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. பிரதிவாதி கடந்த 02.03.2025ம் தேதியில் என்னிடம் ரொக்கமாக தொகை ரூ.6 இலட்சம் கடனாக வாங்கியதாக சொல்லியுள்ளது பொய் என்றால் ? சரியல்ல. நானும், சாட்சியான சேகர் மற்றும் சுவாமிநாதன் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து போலியாக பிரதிவாதியின் கையொப்பத்தையிட்டு பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா கடனுறுதிசீட்டினை சட்டத்திற்கு புறம்பாக தயாரித்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? சரியல்ல. பிரதிவாதிக்கு போதுமான பண வசதி உள்ளது என்றால் ? சரியல்ல. என்னிடமோ, மற்ற மூன்றாம் நபரிடமோ பிரதிவாதி கடன் வாங்க வேண்டிய அவசியம் எக்காலத்திலும் இருந்ததில்லை என்றால் ? சரியல்ல. நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்துள்ளேன். பிரதிவாதியுடன் பிறந்த இரண்டு அண்ணன்களும் வெளிநாட்டில் உள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. பிரதிவாதியின் ஒரு சகோதரர் ரஷ்யாவிலும், மற்றொரு சகோதரர் சுவிட்சர்லாந்திலும் உள்ளார்கள் என்றாலும் அவர்களுக்கு போதுமான வசதி

வாய்ப்புகள் உள்ளது என்று சொன்னாலும் ? அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கும் நல்ல வருமானம் உள்ளது என்றால் ? நான் பணம் கொடுத்த போது அவருக்கு வருமானம் இல்லை. பிரதிவாதிக்கு எல்லாக்காலங்களிலும் நல்ல வருமானம் இருந்தது என்றாலும், நான் பணம் கொடுத்த காலத்தில் பிரதிவாதிக்கு வருமானம் இல்லை என்று சொல்வது பொய் என்றால் ? சரியல்ல. பிரதிவாதி என்னை அணுகி நில அபவிரித்திக்காக தொகை ரூ.6 இலட்சம் கடன் கேட்டதாக நான் சொல்லியுள்ளது வழக்கிற்காக சொல்லப்பட்டுள்ள பொய் என்றால் ? சரியல்ல. பிரதிவாதி என்னிடம் தொகையை கடனாக வாங்கி கொண்டு வட்டி செலுத்துவதாக சொல்லியுள்ளார் என்ற சங்கதி பொய்யானது என்றால் ? சரியல்ல. பிரதிவாதி கடந்த 02.03.2025ம் தேதியிலோ அல்லது வேறு தேதிகளிலோ எந்தவிதமான கடனுறுதிசீட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றாலும், போலியாக போட்ட கையொப்பம் என்றாலும் ? சரியல்ல. நானும், சாட்சிகளும் சேர்ந்து பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ள தேதியில் எனக்கு போதுமான வசதி வாய்ப்புகள் இல்லை என்றால் ? சரியல்ல. அந்த தேதியில் எனக்கு பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் உள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ? HDFC, SBI, DBS ஆகிய வங்கிகளில் எனக்கு சேமிப்பு மற்றும் நடப்பு கணக்கு உள்ளது. வங்கி கணக்கில் கணக்கு புத்தகத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். வங்கி கணக்கு புத்தகத்தை நான் தாக்கல் செய்தால் அதில் பரிமாற்றங்கள் நடந்துள்ள தொகை விபரங்கள் தெரியும் என்பதாலும், எனக்கு போதுமான வசதி வாய்ப்புகள் உள்ளதை நிரூபிக்க முடியாது என்றாலும், நான் கணக்கு புத்தகங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. தொகை

ரூ.20,000த்திற்கு மேல் ஒரு நபருக்கு கொடுக்கும் போது ரொக்க பரிமாற்றமாக கொடுக்க கூடாது என்று எனக்கு தெரியாது என்றால் ? எனக்கு தெரியாது. தொகை ரூ.20,000த்திற்கு மேல் ஒரு நபருக்கு பணம் கொடுக்கும் போது வங்கி பரிவர்த்தனை வழியாக தான் பணம் கொடுக்க வேண்டும் என்றாலும், அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தனக்கு பணம் வேண்டும் என்று எப்போது என்னிடம் கேட்டார் என்றால் ? பணம் கொடுப்பதற்கு முன்பு ஒரு வாரத்திற்கு முன்பு கேட்டார். நான் சொல்லியுள்ளது போல் பிரதிவாதி பணம் கொடுத்ததற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என்னை அணுகி பணம் கேட்கவில்லை என்றாலும், நான் சொல்லியுள்ளது போல் சொல்லியுள்ள தேதியில் பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் ? சரியல்ல. வழக்கிற்காக வேண்டி பொய்யான சங்கதிகளை சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் பிரதிவாதியை நேரில் அணுகி அசலோ, வட்டியோ, தரும்படி ஆட்கள் மூலமாகவோ நான் கேட்கவில்லை என்றாலும், கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. எந்த தேதியில், எங்கு வைத்து, யார் வழியாக பணம்கேட்டேன் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகள் மற்றும் இந்நீதிமன்ற சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரிதான். நான் நேரிலோ, ஆட்கள் வழியாகவோ கேட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் ? சரியல்ல. என்னிடம் பிரதிவாதி கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், நான் பிரதிவாதிக்கு கடன் கொடுக்காத காரணத்தினாலும், யார் வழியாக தொகையை கேட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. பிரதிவாதிகளுக்கும், அவரது சகோதரர்களுக்கும் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சித்ராஉத்தன்பாளையம் என்ற கிராமத்தில் பூமிகள் உள்ளது என்றால் ? சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளை படித்து பார்த்துவிட்டு தான் நான் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். என்னை யார் என்றே தெரியாது என்று சொல்லி தான்

பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? ஆமாம், சரிதான். மேற்படி எதிர்வழக்குரையில் பிரதிவாதி சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து நான் எந்தவிதமான பதில் வழக்குரை சங்கதிகளும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். மேற்படி என்னை யார் என்று தெரியாது என்று பிரதிவாதி சொல்லியுள்ள சங்கதியை பொறுத்து எனது முதன்மை சாட்சியத்திலும், அதை நான் மறுத்து கூறவில்லை என்றால் ? சரிதான். எனக்கு ஜெகதீசன் என்பவரை தெரியும் என்றால் ? தெரியும். எனக்கு வருமான வரி கணக்கு உள்ளது என்றால் ? உள்ளது. எனது PAN எண் என்னால் சொல்ல முடியுமா என்றால் ? மறந்துவிட்டது. எனது PAN Card யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் ? ஆமாம், தாக்கல் செய்ய முடியும். நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன் என்றால் ? ஆமாம். 2023ம் ஆண்டு முதல் தாக்கல் செய்து வந்தேன். இரண்டு வருடம் சரியாக செலுத்தியுள்ளேன். அதற்கு பிறகு செலுத்தவில்லை. இந்த பணப்பரிவர்த்தனை ஏற்பட்ட காலத்தில் நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. இந்த பணத்திற்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை. டிரான்ஸ்போர்ட் தொழிலுக்காக வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன். உண்மையிலுமே நான் கடன் கொடுத்திருக்கும் பட்சத்தில் வருமான வரியில் தொகையினை காட்டியிருப்பேன் என்றாலும், நான் கடன் எதுவும் கொடுக்காத காரணத்தினால் தான் வருமான வரியில் மேற்படி தொகையை காட்டவில்லை என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டு எழுதிய சமயத்தில் எனது வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் ? முதலில் சாமிநாதன் இருந்தார். பிறகு சாமிநாதன், சேகர் என்பவரை வரச் சொன்னதன் பேரில் சேகர் வந்தார். சாட்சிகள் இருவரும் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் ? சாமிநாதன் எனக்கு தெரிந்தவர். அவரது வீட்டில் நான் குடியிருந்தேன். மற்றொரு சாட்சி எனக்கு தெரியாது. பிரதிவாதி அன்றைய தேதியில் என்னையோ, சாட்சிகளையோ, சந்திக்கவில்லை என்றாலும், கடன் தொகை எதுவும் பெறவில்லை என்றாலும் ? சரியல்ல. தாவா

கடனுறுதிசீட்டில் சாட்சிகளின் விபரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. கடனுறுதிசீட்டை எழுதியபிறகு படித்து பார்த்தேனா என்றால் ? ஆமாம், படித்து பார்த்தேன். சாட்சிகளின் விபரங்களை அப்போது படித்து காண்பித்தார்களா என்றால் ? காண்பித்தார்கள். சாட்சிகள் யார் என்றும், எங்கு உள்ளார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளதா என்றால் ? ஆமாம், எழுதப்பட்டுள்ளது. கடனுறுதிசீட்டை யார் கொண்டு வந்தார்கள் என்றால் ? பிரதிவாதி தான் கொண்டு வந்தார். நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதிசீட்டில் உள்ள வாசகங்கள் கம்பியூட்டரில் டைப் செய்யப்பட்டு இருந்ததா என்றால் ? இல்லை, எழுதப்பட்டு இருந்தது. குரோதி வருடம் மாசி மாதம் 21ம் தேதி என்ன கிழமை என்று எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. கடனுறுதிசீட்டில் தொகையானது எண்ணால் எத்தனை இடத்தில் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. தொகை எழுத்தால் எத்தனை இடத்தில் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் ? எனக்கு தெரியாது. எத்தனை இடத்தில் அழித்தல், திருத்தல் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. நான் சொல்வது போல் 02.03.2025ம் தேதியில் பிரதிவாதி எனது வீட்டிற்கு வரவில்லை என்றாலும், எந்தவித கடனுறுதிசீட்டும் எடுத்து வரவில்லை என்றாலும் ? சரியல்ல. பிரதிவாதி கடனுறுதிசீட்டினை கொண்டு வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றால் ? சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்யும் முன்பு தீர்ப்பு முன்பு பற்றுகை செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் ? சரிதான். இ.ம.எண்.01/2025 என்றால் ? ஆமாம். மேற்படி மனுவுடன் பிரதிவாதியின் குடும்ப பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்திருந்தேன் என்றால் ? சரிதான். என்னிடம் காட்டப்படும் கடந்த 02.04.2024 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் தான் என்றால் ? சரிதான். தாவா கடனுறுதிசீட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை தடயவியல் துறைக்கு அனுப்புவதற்கு எனக்கு எந்தவித

ஆட்சபேனையும் இல்லை என்றால் ? சரிதான். நாளது வரை இவ்வழக்கில் பிரதிவாதியின் கையொப்பத்தை தடயவியல் துறைக்கு அனுப்ப நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ? ஆமாம், எடுக்கவில்லை. பிரதிவாதி தனது சொத்திற்கு வில்லங்க சான்று எடுக்க சென்ற போது தான் நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் தடங்கல் மனு கொடுத்துள்ள விபரம் பிரதிவாதிக்கு தெரிய வந்தது என்றால் ? எனக்கு தெரியாது. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதாக சொல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் தடங்கல் மனு கொடுத்திருந்தேன் என்றால் ? ஆமாம். சொத்தினை விற்பனை செய்யக்கூடாது என்று நான் வேறு நபர்களுடன் சேர்ந்து இடையூறு செய்த காரணத்தினால் பிரதிவாதி மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்திருந்தார் என்றால் ? சரிதான். மாவட்ட கண்காணிப்பாளர் ஆள்வரையுள்ள காவல் ஆய்வாளருக்கு, காவல் நிலையத்திற்கு அனுப்பிவிட்டார் என்றால் ? சரிதான். அங்கு விசாரணைக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு என்னை விசாரித்தார்கள் என்றால் ? சரிதான். விசாரித்த காவல் ஆய்வாளர் மேற்படி வழக்கானது உரிமையியல் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்றும், நீதிமன்றத்தை அணுகி கொள்ளும்படியும் அறிவுறுத்தினார்கள் என்றால் ? சரிதான். பிரதிவாதி நல்ல எண்ணத்தை காட்டுவதற்காக இந்நீதிமன்றத்தில் கடந்த 16.10.2025ம் தேதியில் தொகை ரூ.6,37,000த்தை வைப்பீடு செய்துள்ளார் என்றால் ? சரிதான், தொகையை வைப்பீடு செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றாலும், பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் ? சரியல்ல. வழக்கில் உள்ள இரண்டு சாட்சிகளும் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்றால் ? ஒரு நபரின் வீட்டில் நான் குடியிருந்தேன். அதனால் அவரை எனக்கு தெரியும். மற்றொருவரை எனக்கு தெரியாது.

(ஒ/ம்.திரு.சி.ஜெயப்பிரகாஷ்)
சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்